# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.14/2024**

**2024-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 06 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 06 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | சரவணன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பாலசுப்ரமணியன் | சமயம் | - | |
| கிராமம் | - | கருமலை எஸ்டேட் | வயது | - | 41/2024 |
| சாதி | - | | | | |

**20.11.2024**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. அ.சா.1 சந்திராவையும், ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். கடந்த 18.11.2023-ம் தேதி கருமலையை சேர்ந்த சசி என்பவரின் மகன் இறந்து வால்பாறை அரசு மருத்துவமனையில் வைத்திருந்தார்கள். அதை பார்ப்பதற்க்காக நான் அரசு மருத்துவமனைக்கு வந்தேன். இறந்த சசி என்பவரின் மகனின் உடலை கருமலைக்கு அடக்கம் செய்ய ஆஜர் எதிரி ஓட்டி வந்த டிராக்டரில் எடுத்து சென்ற போது நானும் மற்றும் சுமார் 15 நபர்களுடன் அந்த டிராக்டரில் ஏறி சென்றோம். டிராக்டர் நடுமலை பாலத்தில் சென்றபோது டம் என்ற ஒரு சத்தம் கேட்டது. அதில் டிராக்டரில் இருந்த டிரைலர் பாலத்தில் சாய்ந்து விட்டது. அதில் நான் டிரைலரின் முன்பக்கத்தில் இருந்ததால் என்னுடன் இருந்த மற்ற நபர்கள் என் மேல் விழுந்து என்னை அமுக்கிவிட்டார்கள். அதில் எனக்கு காலிலும், நெஞ்சிலும் வலி ஏற்பட்டது. நான் டிரைலரில் இருந்து கீழே இறங்கி எனக்கு மயக்கமாக வந்ததால் பக்கத்தில் அமர்ந்தேன். வண்டியில் இருந்த நபர்கள் அனைவரும் இருக்கிறார்களா என்று பார்த்தபோது மகேஷ் என்பவர் ஆற்றில் விழுந்திருந்தார். மகேஷை ஆற்றில் இருந்து தூக்கி ஆம்புலன்ஸ் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மற்ற நபர்களுக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கு இருந்த வலிக்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டேன். மேற்படி மகேஷை மேல் சிகிச்சைக்காக கோயம்புத்துார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், 2, 3 நாட்கள் கழித்து அவர் இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். டிராக்டர் மிதமான வேகத்தில் தான் சென்றது. போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. பொதுவாக எஸ்டேட் நிர்வாகத்திலிருந்து எஸ்டேட்டில் இருக்கும் நபர்கள் யாராவது இறந்துவிட்டால் அவர்களை எடுத்து செல்வதற்கு டிராக்டர் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். நான் டிராக்டரில் முன்னாடி நின்று சென்றேன் என்றால் சரிதான். டிராக்டர் முன்னால் வந்த

வாகனத்தின் மீது ஏதும் மோதவில்லை என்றால் சரிதான். டிராக்டரில் டிரைலர் மட்டும் சாய்ந்து தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இதற்கு என்ன காரணம் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.